**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No. 10/2024**

Deposition of witness for **RW2** for Respondent and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Sugumaran | Father Name | : | Gunasekarn |
| Village | : | | Age | : | |

**நாள்:16.04.2026.**

**எ.ம.சா.2. முதல் விசாரணை** :

நான் தற்போது கெலமங்கலம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலைய உதவி ஆய்வாளருக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. எங்கள் காவல் நிலைய உதவி ஆய்வாளர் தேர்தல் பணிக்கா சென்று விட்டார். நான் தேன்கனிக்கோட்டை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில்எங்கள் காவல் நிலைய கோர்ட்டு ஏட்டாக பணிபுரிந்து வருவதால் என்னை சாட்சியம் அளிக்க உதவி ஆய்வாளர் அனுமதி கடிதம் கொடுத்துள்ளார். அது **சா.சா.ஆ.Y4** ஆகும். எங்கள் காவல் நிலைய குற்ற எண்.233/2023 என்ற வழக்கில் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள், மாதிரி வரைபடம், குற்ற இறுதி அறிக்கை, எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் உரிமம், கேட்கப்பட்டிருக்கிறது. மாதிரி வரைபடம் **சா.சா.ஆ.Y5** ஆகும். KA 31 ES 1999 என்ற Hero Splender வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை எங்களிடம் இல்லை. அந்த வாகனத்தை நாங்கள் காவல் நிலைய பொறுப்பில் வைத்திருக்கிறோம். அந்த வாகனத்திற்கு சரியான ஆவணங்கள் எங்கள் காவல் நிலையத்தில் ஒப்படைக்காததால் மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு அனுப்ப இயலவில்லை. KA 31 ES 1999 என்ற வாகனத்தை சிவசங்கர் த/பெ.முனிராஜ் என்வர் விபத்தின் போது ஓட்டிஉள்ளார். அவருக்கு ஓட்டுநர் உரிமம் வழக்கு கோப்பில் இல்லை. சா.சா.ஆ.Y2 ல் உள்ள KA 02 MD 2314 என்ற வாகனம் குற்ற எண்.233/2023 க்கு சம்மந்தப்பட்டது அல்ல. இந்த வாகனத்தை நாங்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைக்கு அனுப்பவில்லை. TN 70 AP 5366 என்ற வாகனத்தின் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது. அந்த வாகனத்தை ஓட்டியவர் சிவகுமார் த/பெ. முனேஷ்அப்பா என்பவர் விபத்தின் போது இந்த வாகனத்தை ஓட்டியுள்ளார். அவருக்கு ஓட்டுநர்

உரிமம் இல்லை என்பதால் CR Issue செய்யப்பட்டிருக்கிறது. அவர் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் ரூ.5000 செலுத்தியிருக்கிறார். இந்த குற்ற எண்ணில் இறுதி அறிக்கை இன்னும் தாக்கல் செய்யப்படவில்லை. Victim வாகனத்திற்கான ஆவணங்கள் எங்களிடம் ஒப்படைக்காததால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ய இயலவில்லை.

**குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில் இல்லை.**
**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,

சார்பு நீதிபதி,

தேன்கனிக்கோட்டை.